தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**16வது அகில இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள மற்றும் விளையாட்டுப் போட்டிகள் வேளாண் பல்கலையில் துவக்கம்**

16வது அகில இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள மற்றும் விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விளையாட்டுத் திடலில் இன்று (22-2-2016) துவங்கியது. 5 நாட்கள் நடக்கவிருக்கும் மெகா நிகழ்ச்சியின் இனிய துவக்கம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

சென்னை வருமானவரித் துறை தலைமை ஆணையர், திரு. கே. ராமலிங்கம், இ.வ.ப., அவர்கள் தேசியக் கொடியையும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கொடியை தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். எஸ். திலகர் அவர்களும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கொடியை சென்னை காவல்துறை பொது ஆய்வாளர் முனைவர். எம். ரவி, இ.கா.ப., அவர்களும் ஏற்றினர்.

இந்தியா முழுவதிலிருந்தும் வந்திருந்த 56 அணிகளின் அணிவகுப்பு மரியாதையை சிறப்பு விருந்தினர் சென்னை காவல்துறை பொது ஆய்வாளர் முனைவர். எம். ரவி, இ.கா.ப., அவர்கள் ஏற்றுக்கொண்டார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராமசாமி அவர்கள் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றிட, பல்கலை வீரர்களும் வீராங்கனைகளும் தொடர் ஓட்டமாக கொண்டு சென்று விளையாட்டின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தினர். பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

திரு. கே. ராமலிங்கம், இ.வ.ப. அவர்கள் போட்டிகளைத் துவக்கி வைத்தார். பின்னர் அமைதியின் அடையாளமாக வெள்ளைப் புறாக்களும் ஹீலியம் வாயு நிறைந்த பலூன்களும் வானில் பறக்க விடப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி, 16வது அகில இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளின் துவக்க விழா அறிக்கையினை வாசித்தார். மாணவர்கள் சகோதரத்துவம், நாட்டுப்பற்று ஆகியவற்றை கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து தலைமையுரையாற்றிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு.ராமசாமி அவர்கள், வேளாண் கல்லூரி மாணவர்கள் விளையாட்டுகளிலும் பரிணமிக்கத் தொடங்கியுள்ளனர். தேசிய அளவில் 16 மாணவர்கள் கால் பந்திலும், 12 வீரர்கள் கைப்பந்திலும், 62 வீரர்கள் தடகளப் போட்டிகளிலும் பங்கு பெற்று பரிசுகள் வென்றுள்ளனர். உலக அளவில் டெனிகாய்ட் போட்டியில் வீரர்கள் பங்கு பெற உள்ளனர் என்றும் கூறினார்.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் எஸ். திலகர் அவர்கள் தனது வாழ்த்துரையில் மாணவர்கள், குழு விளையாட்டுகள் மூலம் குழுவாக செயல்படும் முயற்சியை வலியுறுத்தவும், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களோடு பழகும் தன்மையையும் கலாச்சாரங்களை அறியவும் வாய்ப்பாக அமையும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கொடியை சென்னை காவல்துறை பொது ஆய்வாளர் முனைவர். எம். ரவி, இ.கா.ப., அவர்கள் தம் வாழ்த்துரையில் தாம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் என்று பெருமிதம் கொள்வதாகக் கூறினார். வேளாண்மை இல்லாமல் உலகில் அமைதியும் சந்தோஷமும் இருக்க முடியாது என்றார். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 2000 மாணவர்களில் ஒருங்கிணைந்த பாரதத்தை பார்க்க முடிவதாகக் கூறினார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கர்வம் கொள்ளாமல் சமூக பொறுப்பு உணர்வு வேண்டும் என்றார் தோல்வியுறும் மாணவர்கள் மன இறுக்கம் கொள்ளாமல் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்றார்.

திரு. கே. ராமலிங்கம், இ.வ.ப., அவர்கள் வேளாண் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக் குழுவுக்கு இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு பாராட்டு தெரிவித்தார். இந்த பல்கலைக்கழக முன்னாள் மாணவராக இருந்த அவரை வருவாய் பணியில் சேர வைப்பதற்கு விளையாட்டுகளிலும், மாணவர் மன்ற ஈடுபாடுமே முக்கிய பங்கு வகித்தது என்றார். வேளாண் பல்கலையில் பயின்றால் மாணவர்களின் அனைத்து பரிமாணங்களும் வெளிப்படும் என்று கூறியவர் மாணவர்கள் அனைவரும் தங்கள் பன்முகத் திறமையை வளர்த்துக் கொண்டு ஆராய்ச்சியாளர்களாக, நிர்வாகிகளாக, விரிவாக்கப் பணியாளர்களாக விவசாயப் பெருமக்களுக்கு உதவ வேண்டும் என்றார். சிரமமான காலங்களில் மன உறுதியோடு செயல்பட வேண்டும் என்றும் கூறினார்.

திடமான குறிக்கோள், கடின உழைப்பு, தொடர் முயற்சி மற்றும் சுய ஒழுக்கம் ஆயிவை வாழ்க்கையில் வெற்றி பெற மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினார். மாணவர்களின் ஆளுமை தன்மை, தலைமைப் பண்பு ஆகியவை இதன் மூலம் வெளிப்படும் என்றார். வருங்காலத்தில் மனித வள மேம்பாடு, விளையாட்டுத் துறையில் பரிணமித்தல் போன்றவை முக்கியத்துவம் அளிக்கப்படும் துறைகளாக உள்ளது. இநதக் குறியீடுகளில் இந்தியா குறைந்த அளவில் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

திரு. அலெக்ஸ் ஜார்ஜ் இ.த.ப., கோவை மாவட்ட தபால் நிலைய மூத்த கண்காணிப்பாளர் அவர்கள் தபால் தலை வெளியிட்டார். திரு. கே. வேலுசாமி, பொது மேலாளர், மதுரை வட்டம் அவர்கள் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை, வேளாண் பல்கலை உறுப்புக் கல்லூரிக்கு ஆம்புலன்ஸ் வாகனத்தை வழங்கினார். பின்னர், பரதநாட்டியம் மற்றும் கோவை டேக்வாண்டோ குழும மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் தொடக்க விழா நிறைவுற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உடற்கல்வியியல் இயக்குனர், திரு. ஜி. ராகவன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்